2001 செப்டம்பர் 11] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

நடைமுறையில் உள்ளது. இதன்மீது அரசு ஒரு சிறப்புக் குழு அமைத்து 500 மீட்டர் என்ற விதியைத் தளர்த்துவது குறித்த கருத்தை ஆய்வு செய்ய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசாணை எண் 44, திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித் துறை, 2-4-1990இன்படி 43 வட்டங்களில் சுரங்கப் பணிகள் மற்றும் சிறு கனிமம் தோண்டுவதற்கான நடைமுறைகளில் ஒன்றாக, மலைப்பகுதி மேம்பாட்டுப் பாதுகாப்பு குழுமத்தின் அதாவது Hill Area Conservation Authority-யின் அனுமதி பெற வேண்டும். இவ்வகைப்பட்ட பகுதிகளில் மலைப்பகுதி கிராமங்கள் மட்டும் தனியாக இனம் காணப்பட்டு, சமதளப் பகுதிகளிலுள்ள அரசு மற்றும் தனியார் நிலங்களிலுள்ள கல்குவாரிகளைக் குத்தகை விடுகின்ற வகையில் மேற்சொன்ன அரசாணையில் சில திருத்தங்களைக் கொண்டுவர இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டு காரணங்களினால், கல்குவாரிகள் ஏலம் தற்போது சிறிது தாமதமாகுமே தவிர, தொழிலாளர்களுக்கு இதனால் எந்தவித வேலைவாய்ப்பு பாதிப்பும் ஏற்பட வழியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனை இரத்த வங்கி செயல்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் இருப்பது குறித்து கவன ஈர்ப்பாக திரு. கா. கந்தசாமி அவர்கள் அறிவிப்புக் கொடுத்து உள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். தீர்மானத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசினர் மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழே இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்படாமல் ... விபத்து ஏற்படும் சமயங்க...

[திரு. கா. கந்தசாமி] [2001 செப்டம்பர் 11

குன்னூர் வியாபாரிகள் இரத்தத்தைக் கொடுப்பதற்கு முன்வருகின்றார்கள். எனவே, அந்த இரத்த வங்கி செயல்படுவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஒன்றை நிறுவுவதற்கான அரசாணை 16-4-1964ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன் அதற்கென்று 30 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அது நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவிற்குக் குறைவாக இருந்த காரணத்தினாலே, மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆய்வு செய்யும் குழு, உரிமம் வழங்க மறுத்துவிட்டது. பின்னர், 1998ஆம் ஆண்டு 84.69 சதுர மீட்டரில் மற்றொரு திருத்தியமைக்கப்பட்ட வரைபடமும் மற்றும் உத்தேச செலவினப் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இந்த நிலையில் மத்திய அரசின் 1999ஆம் வருடத்திய வரையறையின்படி இரத்த சேமிப்பு வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் குறைந்தது நூறு சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடமும், அதில் 7 அறைகளும் இருக்கவேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்த வரையறையின்படி இரண்டாவதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடமும், செலவினப் பட்டியலும் அமையவில்லை. அதனால் புதிய இடத்தில் வரையறைக்கு உட்பட்டு இரத்த சேமிப்பு வங்கி கட்டுவதற்காக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய Constituency Fund-லிருந்து ரூபாய் 9 இலட்சம் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கியதன் விளைவாக இந்தக் கட்டடம் தற்போது கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்புக் கொடுக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் இந்த வேலைகள் முடிக்கப்பட்டுவிடும்.

முற்பகல் 10-45

இரத்த சேமிப்பு வங்கி ஒன்றை அரசு மருத்துவமனையில் அமைக்க வேண்டுமென்று சொன்னால் சில வரையறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த வகையில், குன்னூரிலுள்ள இரத்த வங்கிக்கு Blood Sacer, Blood Weighing Machine கருவிகள் இன்னும் வாங்கப்படவில்லை. ஏனைய கருவிகளும், மருத்துவ அதிகாரியும், மருத்துவம் சாராப் பணியாளர்களும் உள்ளனர். அந்த மருத்துவ அதிகாரி இருந்தும், அதற்கான பயிற்சி அவருக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. எனவே,

2001 செப்டம்பர் 11] [திரு. செ. செம்மலை]

மருத்துவ நிபுணர் அதற்குரிய பயிற்சிக்கு உடனடியாக அனுப்பப்பட இருக்கிறார். தேவையான மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு கிடைத்தது போல, 37 வருடங்களாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினைக்கும், தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விடிவு காலம் பிறந்திருக்கிறது. இன்னும் 15 நாட்களில், எஞ்சியுள்ள வேலைகள் முடிந்தவுடன் இடத்தையும், முடிக்கப்பட்ட பணிகளையும் ஆய்வு செய்வதற்கு மருத்துவக் கட்டுப்பாட்டுத் துறையினுடைய இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட இருக்கிறது. அவருடைய ஆய்வுக்குப் பின்னாலே உரிமம் கிடைத்துவிடும். உரிமம் கிடைக்கப்பெற்றவுடன் கூடிய விரைவில் இந்த இரத்த வங்கி, குன்னூரில் செயல்படத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

3. விதி 110-இன்கீழ் அறிக்கைகள்

(அ) அரிசியையும் நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தல் மற்றும் நெல்லுக்கு ஆதார விலையுடன் ஊக்கத் தொகை அளித்து கொள்முதல் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-இன்கீழ், இரண்டு முக்கியமான பிரச்சினைகள் குறித்து, அவைக்கு இரண்டு அறிக்கைகள் அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருப்பிலுள்ள அரிசி மற்றும் நெல் ஆகியவற்றின் அளவு, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களின்கீழ் வழங்கத் தேவைப்படும் அரிசியின் அளவு, மாதந்தோறும் மத்திய அரசு, தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியின் அளவு மற்றும் தஞ்சை வடிகால் பகுதி விவசாயிகளின் கோரிக்கைகள் ஆகியவற்றை, 10-9-2001 அன்று, தமிழக அமைச்சரவை பரிசீலித்து ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை மேற்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)